முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

முன்னிலை:-செல்வி.எஸ்.பத்மாவதி .ML.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.90/2025 இன் அ.வ.எண்.3/2024

| | |
|---|---|
| 1. திருவேங்கடம் (இறந்தார்) | ..... மனுதாரர்கள்/வாதிகள் |
| 2. T.வசந்தகுமாரி | |
| 3. T. அருணா | ..... மனுதாரர்கள்/ |
| 4. T.கிருத்திகா | சேர்க்கப்படவேண்டிய |
| 5. T. சவிதா | 2 முதல் 6 மனுதாரர்கள்/ |
| 6. T.சபரிநாதன் | சேர்க்கப்படவேண்டிய 2 முதல் 6 வாதிகள் |

/எதிர்/

| | |
|---|---|
| ராமநாதன் | ... எதிர்மனுதாரர் /பிரதிவாதி |

இந்த இடைக்கால மனு என் முன்னர் இன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A. கைலாஷ் அவர்கள் அஜராகியும், 8, எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.ராஜேந்திரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டு, ஆவண்ங்களை பரிசீலணை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலணைகுட்பட்டு, இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.

## உத்தரவு

1ம் வாதியின் வாரிசுதாரர்களாக 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் சேர்த்து கொண்டு வழக்கு நடவடிக்கைகளை மேல்நடத்த கோரி உரிமையியல் நடைமுறைசட்டம், 1908 உத்தரவு 22 விதி 3 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

2. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:-

மனுதாரர் அசல் வழக்கில் 5 ம் வாதி என்றும், எதிர்மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி என்றும், மனுதாரர் தனக்காகவும், 2 முதல் 4, 6 மனுதாரர்களுக்காகவும், மனுவை தாக்கல் செய்துள்ளதாககவும் 1ம் மனுதாரான தனது தந்தை வழக்கை, விளம்புகை, ஒப்புதல், செயலுறுத்துக்கட்டளைக்காக தாக்கல் செய்ததாகவும், எதிர்மனுதாரர் எதிர் வழக்குரை தாக்கல் செய்து வழக்கை நடத்தி வந்ததாகவும் வழக்கு நிலுவையில் இருக்கும்போது தனது தந்தை 20.01.2025 ல் மனைவி, 3 மகள்கள், மகன் உள்ளிட்ட 2 முதல் 6 மனுதாரர்களை வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார் என்றும், வாரிசுகளாக தங்களை வழக்கு சேர்க்க வேண்டி குறிப்பிடப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிரிருரையின் சுருக்கம்:-

மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கதக்கதல்ல என்றும், ஆட்சேபணையில் வெளிப்படையாக ஒப்புக்கொணட அம்சங்கள் தவிர மற்றவை குறிப்பாக மறுக்கப்படுகிறது.

மனுதாரர் 1ம் வாதி இறந்ததற்கான இறப்புச் சான்றிதழ் வாரிசு சான்றிதழ் எதுவும் தன் மனுவுடன் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மனுதாரர் கூறும்

அம்ங்களை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார் என்றும், அவ்வாறு மனுதாரர் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யாததால் மனு ஏற்புடையதல்ல என்றும், மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் சாட்சிய சான்றாவணம் தாக்கல் இல்லை.

5. மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள காலதாமத மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. **தீர்வு**

விளம்புகை, ஒப்புதல், செயலுறுத்துக்கட்டளைக்காக தாக்கல் செய்து நிலுவையில் இருக்கும்போது 1ம் வாதி தனது தந்தை 20.01.2025 ல் மனைவி, 3 மகள்கள், மகன் உள்ளிட்ட 2 முதல் 6 மனுதாரர்களை வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார் என்றும், தங்களை வழக்கில் வாரிசுதாரர்களாக சேர்த்து கொள்ள வேண்டப்பட்ட நிலையில், எதிர்மனுதாரர் / பிரதிவாதி மனுதாரர் 1ம் வாதி இறந்ததற்கான இறப்புச் சான்றிதழ் வாரிசு சான்றிதழ் எதுவும் மனுவுடன் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மனுதாரர் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யாததால் மனு ஏற்புடையதல்ல என குறிப்பிட்டு ஆட்சிபிக்கப்பட்டிருப்பதையும் கருத்தில் கொண்டு பார்க்கும்போது ம.சா.ஆ.1 வாரிசுசான்றிதழ் காரணமாகவும் எதிர்மனுதாரர் தரப்பில், 1ம் மனுதாரான திருவேங்கடம் 20.01.2025 ல் இறந்தார் என்பதும், அவருக்கு 2 முதல் 6 மனுதாரர்கள் வாரிசுகள் என்பதும் மறுக்கப்படவில்லை என்பதால் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாருக்கு எந்தவித பாதிப்பும்

ஏற்படப்போவதில்லை என இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

7. இறுதியாக , இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சொல்ல சொல்ல சுருக்கெழுத்து தட்டச்சரால் உடனுக்குடன் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-S.Padmavathi)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை
மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:- இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :- இல்லை

(Sd/-S.Padmavathi)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

அசல்-நகல்-உத்தரவு
வ.வி.எண்.90/2025
இன்
அ.வ.எண்.3/2024
நாள். 11.11.2025